# மீரிகம பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வுக்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 23 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 17 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மீரிகம பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததென்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீரிகம பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) டேலருடனான 02 ரெக்ரர்களின் பெறுமதி ரூபா 2,040,000 தொகையானது நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய ரூபா 17,631,968 முத்திரை முற்பணம் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த கணனியின் பெறுமதியான ரூபா 142,000 தொகை கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 8,046,445 ஆக இருந்த போதிலும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 5,867,589 ஆனமையால் ரூபா 2,178,856 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 117,957 பெறுமதியான எஞ்சிய இருப்புக்கள் இறுதியிருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,029,223 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,130,523 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றிக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவை** | |
| (i) 31 ஆம் விதி | வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் |

| | | |
|---|---|---|
| | | ரூபா 6,709 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக விதியின் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 59 ஆம் விதி | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் தொடர்புடைய பிரிவுகளின் பிரகாரம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் சபை அதிகார பிரதேசத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மெய்மையாய்வை மேற்கொண்டு கைத்தொழில்கள் தொடர்பாக பட்டியல் ஒன்று தயாரித்து மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 218 ஆம் விதி | சபை வசமுள்ள சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்கப்படுவதற்கு தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| | நி.பி 396(ஈ) | 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காலங்கடந்த ரூபா 8,580 பெறுமதியான 03 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புடைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்

ரூபா 8,054,267 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,392,580 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவைவருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டவை | உள்ளவா றானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட வை | உள்ளவா றானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரியும் வரியும் | 8,316 | 3,211 | 5,105 | 6,347 | 1,604 | 4,743 |
| வாடகை | 4,240 | 3,406 | 834 | 4,771 | 3,955 | 816 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,830 | 1,492 | 338 | 1,669 | 1,297 | 372 |
| ஏனைய வருமானம் | 5,800 | 4,765 | 1,035 | 3,119 | 2,416 | 703 |

### 2.2.2 நிலுவை ஆதன வரியும் ஏனைய வருமானமும்

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையாக இருந்த ஆதனவரி மற்றும் ஏனைய வருமானங்களான ரூபா 812,965 தொகையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு சபைச் செயலாளரினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரிகளின் கூட்டுத்தொகை ரூபா 793,331 ஆக இருந்ததுடன் அதில் மீரிகம, பல்லேவல மற்றும் உடுகஹ உபகாரியாலயங்களில் முறையே

ரூபா 96,592 தொகை ரூபா 194,408 தொகை மற்றும் ரூபா 502,331 தொகை என்ற நிலுவை மீதிகள் அவதானிக்கப்பட்டன.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 39,277 | 36,379 | 2,898 | 39,821 | 35,506 | 4,315 |
| ஏனையவை | 41,868 | 22,038 | 19,830 | 42,904 | 33,456 | 9,448 |
| உப மொத்தம் | 81,145 | 58,417 | 22,728 | 82,725 | 68,962 | 13,763 |
| மூலதனச் செலவினம் | 69,375 | 19,226 | 50,149 | 60,712 | 34,305 | 26,407 |
| மொத்தம் | 150,520 | 77,643 | 72,877 | 143,437 | 103,267 | 40,170 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 03 | 02 |
| இரண்டாம் தரத்தினர் | 33 | 33 |
| ஆரம்ப தரத்தினர் | 111 | 94 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | ---- | 34 |
| | 147 | 163 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

2009 மார்ச் மாதத்தின்போது ரூபா 1,296,878 தொகை செலவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த பல்லேவல பொது வியாபாரக் கட்டிடத் தொகுதியிலுள்ள கிணறு ஒரு வருடமும் 09 மாத காலப்பகுதியில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் முற்கொடுப்னவுகளின் பெறுமதி ரூபா 6,173,688 ஆக இருந்ததுடன், 01 வருடத்தினை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,164,188 ஆகும்.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் தொடர்ந்து முன்கொண்டுவரப்படுகின்ற ஊழியர் கடன் மீதிகள் ரூபா 32,071 ஆக இருந்தது.

## 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீரிகம வியாபாரக் கடைத் தொகுதியின் நிர்மாணச் செயற்பாடுகள் 2000 சனவரி 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2000 திசெம்பர் 16 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் அனுமதியற்ற முறையில் இந்நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினால் அதற்காக ஏற்பட்டிருந்த எதிர்ப்பின் காரணமாக செயற்திட்டத்தினை இடையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்காக சபையினால் செலவிடப்பட்டிருந்த ரூபத 11,691,237 தொகையும் விளைவற்ற ஒரு செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2010 இன் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பிரதான அலுவலகம் மற்றும் உப காரியாலயங்களில் அவதானிக்கப்பட்ட ரூபா 23,190 பெறுமதியான பொருட்பதிவேட்டு / இருப்புக்கள் குறைவு தொடர்பாக தொடர்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நானாவித கடன்கொடுத்தோர் கணக்கில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 200,000 தொகையான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் ஒருவர் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு